www.Padasalai.Net www.TrbTnpsc.com

Good Reader Tamil A. Dinesh

K

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No. 12005

## பொதுத்தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

### பகுதி - அ

**I. பலவுள் தெரிக:** 8 x 1 = 8

1. "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது
   அ) (க) மட்டும் சரி ஆ) (க), (உ) இரண்டும் சரி
   இ) (ங) மட்டும் சரி ஈ) (க), (ங) இரண்டும் சரி
2. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு
   கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
3. பொருத்துக:
   அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு.நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்
   இ) இடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜ நாராயணன்
   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர் நிலைகள்
5. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
   இ) உவமைத்தொகை ஈ) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
6. 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படுபவர்
   அ) ஆறுமுக் நாவலர் ஆ) பாரதியார் இ) தி.சு.நடராசன் ஈ) திரு.வி.க.
7. 'நீயே புருஷ மேரு ...' என்ற பாடலை இயற்றியவர்
   அ) சுத்தானந்த பாரதியார் ஆ) கோபால கிருஷ்ண பாரதியார்
   இ) கவிமணி ஈ) மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
8. "கிழக்கு வாசல் உதயம்" என்ற திங்களிதழை நடத்தி வருபவர்
   அ) அப்துல் ரகுமான் ஆ) கவிஞர் சுரதா இ) உத்தம சோழன் ஈ) சுஜாதா

**II. எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளில் விடையளி:** 5 x 2 = 10

9. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
10. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?
11. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.
12. பொருள் வேற்றுமை - அணியிலக்கணம் கூறுக.
13. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
14. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

Thiruvannamalai

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**III. எவையேனும் நான்கனுக்கு குறுகிய வடிவில் விடையளி:** 4 x 4 = 16

16. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். - விளக்குக.
17. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
18. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
19. பின்வரும் கலைச் சொற்களுக்கு தமிழாக்கம் தருக.
    அ) Subscription ஆ) Biography இ) Platform ஈ) Level crossing
20. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
21. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

**IV. அடிபிறழாமல எழுதுக:** 1 x 4 = 4

22. 'ஓங்கலிடை வந்து ....' எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலை அடி மாறாமல் எழுதுக.

**V. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி:** 1 x 6 = 6

23. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

24. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**VI. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி:** 1 x 6 = 6

25. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

26. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.

******

Thiruvannamalai

Scanned by CamScanner